BRAMPTON **Service and Information Update**

# ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஏப்ரல் 13 ஆம் நாள் கோவிட்-19 டெலி டவுன்ஹால் நிகழ்ச்சியை நடத்துகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 7, 2022) – கோவிட்-19 பற்றிய மிக சமீபத்திய தகவல்கள் பற்றி தெரிந்து வைத்துக் கொள்வதற்காக ஏப்ரல் 13, புதன்கிழமை மாலை 6: 30 முதல் 8 மணி வரை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒரு டெலிடவுன்ஹால் நடத்துகிறது; இதில் கலந்துகொள்ள குடியிருப்புவாசிகள் மற்றும் வணிகர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

நகர நிர்வாகமானது கோவிட்-19 பணிப்படைகள் செய்த வேலைகள் பற்றியும் கூட எடுத்துக்கூறும்; மற்றும் சமுதாயத்தினர் வழங்கும் உதவிகளை நகரின் சேவை சேர்ப்பித்தல் முறை வழியாகவும் சமுதாயத்தில் உள்ள சமூக ஆதரவு நெட்வொர்க்குகள் வழியாகவும் எப்படி இந்த சேவைகளை கொண்டு சேர்ப்பது எனவும் எடுத்துரைக்கும்.

டெலி டவுன்ஹால்-இல் இடம்பெறவிருப்பவர்கள்:

- பேட்ரிக் ப்ரவுன், மேயர், மற்றும் நகரின் பணிப்படைகளின் தலைவர், ப்ராம்ப்ட்டன் நகரம்
- பீல் பிராந்திய நிர்வாகம், பொது சுகாதாரம்
- வில்லியம் ஆஸ்லர் சுகாதார கட்டமைப்பு
- ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவையினர்
- பீல் பிராந்திய போலீஸ் துறை
- பீல் பிராந்திய பாரா-மருத்துவ சேவைகள்

Brampton.ca/covid19 இல் பங்கேற்பதை உறுதி செய்ய உங்கள் தொலைபேசி எண்ணை பதிவு செய்யவும்

நகரம் படிப்படியாகவும் பாதுகாப்பாகவும் மீண்டும் திறக்கப்படுவதால், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்தியபடி இருக்கிறது; மேலும் தொற்றுநோய் பரவல் காலம் முழுவதுமாக உடல் ரீதியாக விலகி இருத்தல், நல்ல சுகாதாரத்தை கடைப்பிடித்தல் மூலமும், தடுப்பூசிகள் செலுத்திக்கொள்ளுதல் மற்றும் முக கவசங்களை அணிந்து தொற்று பரவுவதைத் தடுக்க உதவிய குடியிருப்புவாசிகள் அனைவருக்கும் எமது நன்றி.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca